**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்–2, கரூர்.</u>**

**<u>முன்னிலை</u>** : திரு. எம். சார்லஸ் ஆல்பர்ட், B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்–2, கரூர்.

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம், வைகாசி திங்கள் 27–ஆம் நாள்

**<u>2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10–ஆம் நாள் புதன்கிழமை</u>**

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.919/2025</u>**

**அரசுக்காக**
**காவல் உதவி ஆய்வாளர்,**
வாங்கல் காவல் நிலையம்.
**(காவல்நிலைய குற்ற எண். 433/2023).** ... முறையிடுபவர்.

**.../ எதிர்/...**

**திரு.சதீஸ்குமார்,**
த/பெ.தண்டபானி ... எதிரி

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 08.09.2025–ம் தேதியன்று கோப்பில் எடுக்கப்பட்டு, இன்று வரையில் என் முன்பாக விசாரணைக்கும், எனது பரிசீலனையிலும் இருந்து வந்தும், இறுதியாக 10.06.2026–ம் தேதியன்று அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர்–நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தாமாக முன்னிலையாகியும் எதிரி தெரிவித்த ஒப்புதல் மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும் 10.06.2026 ம் தேதி இன்று இந்நீதிமன்றம் வழுங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 13.09.2023 ம் தேதி இரவு கரூரில் நகைக்கடையில் வேலை முடித்துவிட்டு சுமாா 10.10 மணியளவில் வாங்கல் காவல் நிலைய சரகம் கரூர் – வாங்கல் செல்லும் சாலையில் உள்ள எல்லைமேடு தண்ணீர் டேங்க் அருகில் சென்று கொண்டிருந்தபோது சாலையில் வலது புறத்தில் எதிர் திசையில் சாலையின் ஓர மண் பகுதியில் வாங்கல் ஓடையூரை சேர்ந்த கருப்பண்ணன் மகன் பெரியசாமி என்பவர் TN–47–AT–7209 என்ற தனது இரு சக்கர வாகனத்தை வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்தபோது வாங்கலில் இருந்து கரூர் மார்க்கமாக நெரூர் பகுதியை சேர்ந்த பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த TN–47–AT–5676 Hero Honda Splendor என்ற இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் மேற்படி சாலை ஓரத்தில் நின்று கொண்டிருந்த பெரியசாமி மீதும் அவரது வாகனத்தின் மீது மோதியதில் மேற்படி இருவருக்கும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளது. அப்போது வாதியும் அங்கு இருந்தவர்களும் காயம்பட்டவர்களை அவர்களை ஆம்புலன்ஸில் ஏற்றிவிட்டு கொண்டிருந்தபோது மேற்படி விபத்து ஏற்படுத்தியவரின் உறவினரான அங்கு இருந்த நெரூரை சேர்ந்த மணி என்பவர் எதிரிக்கு போன்மூலம் தகவல் சொல்லி சம்பவ இடத்திற்கு வந்த எதிரிக்கும் வாதிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு எதிரி வாதியை பார்த்து ஏண்டா புண்டா மவனே யாருக்கு ஆக்ஸிடன்ட் ஆனா என்ன செத்துப்போனா உனக்கு என்ன உனக்கு என்னடா இங்க வேலப்புண்டை என்று தகாத வார்த்தையால் திட்டி கையால் கன்னத்தில் அறைந்து குற்றசெயல் புரிந்துள்ளதாகவும், எனவே, எதிரியின்

இந்த செய்கைக்கு வாங்கல் காவல் உதவி ஆய்வாளர் எதிரி மீது ச/பி. 294(b), 352 IPC –ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், பா.நா.சு.ச. பிரிவு 230–ன் கீழ் எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3. இருதரப்பும் கேட்டும், இவ்வழக்காவணங்களை ஆராய்ந்தும், எதிரி மீதான குற்ற சாராம்சம் குறித்து எடுத்துக் கூறி வினவிய போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன் எனவும் அபராதம் மட்டும் விதித்து தன்னை விடுதலை செய்யுமாறும் வேண்டினார்.

4. எதிரியின் தன்னிச்சையான குற்ற ஒப்புதலைக் கருத்தில் கொண்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையிலும் எதிரி மீது இ.த.ச பிரிவு 294(b), 352 ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

5. முடிவாக எதிரியின் மீது இ.த.ச பிரிவு 294(b), 352 –ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து அவருக்கு வழங்கப்படவிருக்கும் தண்டனை குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன் எனவும், முன் வழக்கு எதுவும் இல்லை என்றும், தண்டனையை குறைத்து தருமாறும் வேண்டினார்.

6. முடிவில், எதிரியின் பதிலைக் கருத்தில் கொண்டு எதிரியின் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான இ.த.ச பிரிவு 294(b), 352 –ன் கீழான குற்றத்திற்கு அபராதம் ரூ.1,000/–மும், அபராதத்தை கட்டத் தவறினால் 2 வாரம் மெய்க்காவல் சிறை தண்டனையும் விதித்தும், இ.த.ச பிரிவு 352 –ன் கீழான குற்றத்திற்கு அபராதம் ரூ.500/–ம், அபராதத்தை கட்டத் தவறினால் 1 வாரம் மெய்க்காவல் சிறை தண்டனையும் விதித்தும், பா.நா.சு.ச பிரிவு 275–ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கின் மொத்த அபராதம் தொகை ரூ.1500/–

7. எதிரியை காவல்துறையினரால் பிணையின் பேரில் விடப்பட்ட பிணையமானது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு தானாகவே ரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகின்றது.

8. இவ்வழக்கில் வழக்குச் சொத்தாக எதுவும் குறியீடு செய்யப்படவில்லை என்பதால் அது சம்மந்தமாக எந்த உத்தரவும் பிறப்புவிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026– ம் ஆண்டு ஜூன் மாதம் 10–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M CHARLES ALBERT Digitally signed by M CHARLES ALBERT

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**கரூர்.**